**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 95/2018**
**நாள்.13.08.2025**
**வா.சா.2- பரமேஸ்வரன்**
**த/பெ - நடேசன்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. வாதி தங்கவேல் எனது சித்தப்பா உறவு முறை என்றால் இல்லை.

2. தங்கவேலின் அண்ணன் மகன் என்பதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க என்னை வாதி தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான்.

4. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை தங்கவேல் தான் சொன்னார் என்றால் சரிதான்.

5. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கேணி மற்றும் இடப்பிரச்சனை சம்பந்தமாக வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. எந்த எந்த சர்வே எண்களுக்காக வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சர்வே எண்.1562/5, சர்வே எண்.1562/3B ஆகியவற்றிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்

7. மேற்படி சர்வே எண்கள் 1562/5, 1562/3B கட்டுப்பட்ட நிலங்களை வாதி அனுபவிப்பதில் பிரதிவாதிக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான்.

8. சர்வே எண் 1562/5 ல் ஏற்கனவே போர் போட்டு மோட்டார் சர்வீஸ் வைத்துள்ளார் என்றால் சரிதான் **(சாட்சி மீண்டும் தங்கவேல் வகையறாவை நாகரத்தினம் வகையறா வரக்கூடாது என்று சொன்னதால் மீண்டும் தங்கவேலுக்கு பாத்தியப்பட்ட இடத்தில் மோட்டர் சர்வீஸ் வைத்துள்ளார்கள் என்று சாட்சியம் அளிக்கிறார்)**

9. சர்வே எண்.1562/5 ல் தென்னை மரங்கள் வைத்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

10. சர்வே எண்.1562/5 க்கு தென்புறத்தில் சர்வே எண்.1562/7 சுமார் 2 அடி பள்ளத்தில் உள்ளது என்றால் சரிதான்.

11. சர்வே எண்.1562/5 க்கும், சர்வே எண்.1562/6 க்கும் இடையில் பிரிக்கக்கூடிய வரப்பு உள்ளது என்றால் சரிதான்.

12. கிணறு சர்வே எண்.1562/6 ல் உள்ளது என்றால் சரிதான்.

13. சர்வே எண்.1562/5 மற்றும் சர்வே எண்.1562/3B ஆகியவை வாதியால் கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான்.

14. சர்வே எண்.1562/5 க்கும், சர்வே எண்.1562/6 க்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், சர்வே எண்.1562/6 ல் உள்ள கிணற்றை வாதி பயன்படுத்துவதற்கு உரிமை இல்லை என்றாலும், வாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

PETER B Digitally signed by PETER B

**Principal District Munsif**
**Vedasandur**